## மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை

## O.S. No.115/2019

## 2023ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7-ஆம் தேதி திங்கட்கிழமை

பி.வா.சா.7 சாட்சியின் வாக்குமூலம் பிரமாணச்சட்டம் 1969, பிரிவு 6(1)ன்படி இளநிலை உதவியாளர் திரு.பி.இளங்கோவன் என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் கருணாநிதி | தபெ |
| ஊர் | வட்டம் |
| சாதி | சமயம் |
| வயது | தொழில் |

**முதல்விசாரணை:-**

நான் இந்த வழக்கின் 9வது பிரதிவாதி ஆவேன். பிரதிவாதி தரப்பு 7வது சாட்சி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். என்னுடைய தகவலின் பேரில் தான் தயாரிக்கப்பட்டது. அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு கையெழுத்திட்டேன். அதனை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். கடந்த 26.07.2000 தேதிய பதிவு செய்யப்பட்ட பதிவு பாக பத்திரம் சார்பதிவக நகல் பி.வா.சா.ஆ.31 ஆக குறியீடு செய்யப்படுகின்றது. கடந்த 03.05.2002 தேதிய பதிவு கிரையப்பத்திரம் சார்பதிவக நகல் பி.வா.சா.ஆ.32 ஆக குறியீடு செய்யப்படுகின்றது. கடந்த 03.06.2004 தேதிய கிரையப்பத்திரம் சார்பதிவக நகல் பி.வா.சா.ஆ.33 ஆக குறியீடு செய்யப்படுகின்றது.கடந்த 27.11.2006 தேதிய கிரையப்பத்திரம் சார்பதிவக நகல் பி.வா.சா.ஆ.34 ஆக குறியீடு செய்யப்படுகின்றது. கடந்த 15.12.2004 தேதிய கிரையப்பத்திரம் சார்பதிவக நகல் பி.வா.சா.ஆ.35 ஆக குறியீடு செய்யப்படுகின்றது.கடந்த 03.06.2004 தேதிய கிரையப்பத்திரம் சார்பதிவக நகல் பி.வா.சா.ஆ.36 ஆக குறியீடு செய்யப்படுகின்றது. கடந்த 05.03.2010 தேதிய அடமான கடன் பத்திரம் சார்பதிவக நகல் பி.வா.சா.ஆ.37 ஆக குறியீடு செய்யப்படுகின்றது. பிராதை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

8ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டது.

7ம் பிரதிவாதி மற்றும் வாதி தரப்பு வழக்குரைஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகின்றது.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை